# திருநெல்வேலி மாநகராட்சி

## 31.03.2023 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

***மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்***

**தீர்மானம் எண்: 244**

**பாளையங்கோட்டை மேட்டுத்திடல் அரசு மருத்துவமனையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.மிகவும் நலிவுற்ற உள் மற்றும் வெளிநோயாளிகள் உணவின்றி தவிப்பதை பார்க்கிறோம்.அவர்கள் பயன்பெறுகின்ற வகையில் நல்ல தரமான காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் வகையில் மாநகராட்சி சார்பில் மலிவு விலையில் உணவகம் அமைத்திட வேண்டுமென அதற்கான அனுமதியை தமிழக அரசிடம் பெறுவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது.**

---

**தீர்மானம் எண்: 245**

**ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் பணி செய்த மகத்தான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஜூன் 3 முதல் நாடு முழுவதும் கொண்டாடப்பட இருக்கிறது. அவரை போற்றுகின்ற வகையில் திருநெல்வேலி மாநகராட்சியின் எல்லையில் "கலைஞர் நூற்றாண்டு வளைவு" மாநகராட்சியின் சார்பில் அமைப்பதென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.**

---

## ***சாதாரண கூட்டப் பொருட்கள்***

1. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண். 48 ஜான் ஷெவன் சிட்டி மெயின் தெருவில் போதிய தெருவிளக்கு வசதியில்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட மிகவும் சிரமப்படுகின்றனர்.அத்தெருவில் ஏற்கனவே உள்ள 4 மின்கம்பங்களில் 20 watts LED விளக்குகள் 4 எண்ணம் அமைக்கவும்,தெருவிளக்கு மின்இணைப்பு கம்பிகள் அமைக்க மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகை உட்பட உத்தேசமாக ரூ.60,000/- செலவாகும்.மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு:-

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண். 48 ஜான் ஷெவன் சிட்டி மெயின் தெருவில் போதிய தெருவிளக்கு வசதியில்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட மிகவும் சிரமப்படுவதாலும்.அத்தெருவில் ஏற்கனவே 4 மின்கம்பங்கள் உள்ளதாலும்,அவற்றில் 20 **watts LED** விளக்குகள் 4 எண்ணம் அமைக்கவும்.அவற்றிற்கு தெருவிளக்கு மின்இணைப்பு கம்பிகள் அமைக்க மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகை உட்பட உத்தேசமாக செலவுத்தொகை ரூ.60000/-க்கு(ரூபாய். அறுபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழுங்கலாம்.

ந.க.எண். இ1/1862/2022

**தீர்மானம் எண்: 246 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**2. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.25.5.2009ன்படி 2022-2025-ஆம் காலத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கு மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட கழிப்பிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்தில் வைத்து 21.02.2023 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள விளம்பர பலகைகளிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.**

| | மேலப்பாளையம் மண்டலம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 5 எண்ணங்கள் நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா பேரூந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | | | | |
|---|---|---|---|---|---|
| உ) | நடை மேடை- 6<br>சென்னை பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் | 0.75 | 1.50 | 0.75 | 3.00 |
| ஊ) | மேலப்பாளையம் ரவுண்டானா கார்னர் கழிப்பிடம் | 0.50 | 1.00 | 0.50 | 2.00 |

மேற்படி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் 2- ஊ இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்கண்ட வரிசை எண் 2 (உ)-வில் உள்ள சென்னை பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார்.

ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 3,00,000/-)

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. E.பிரெவின் ராஜ்தேவ்,<br>த/பெ. D.எட்வர்ட் ஜான்,<br>கதவு எண் 60D/6, 9-வது தாமஸ் தெரு,<br>பெருமாள்புரம் | வைப்புத்தொகை ரூ.75000/- ஐசிஐசிஐ வங்கி DD. No. 503532 dated 20.02.2023 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.75000/- ஐசிஐசிஐ வங்கி DD. No. 503533 dated 20.02.2023 | ரூ.3,30,300/- |

மேற்படி உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு. E.பிரெவின் என்பவர் ரூ.3,30,300/- என உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.30300/- கூடுதலாக இருப்பதால் திரு. E.பிரெவின் என்பவர் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,30,300/-ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

அ) பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சென்னை பேருந்து நிற்கும் இடத்தில் உள்ள கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 21.02.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு. E.பிரெவின் என்பவர் ரூ.3,30,300/- என உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு கேட்டுள்ளார். மேற்படி தொகையானது நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.30,300/- கூடுதலாக இருப்பதால் திரு. E.பிரெவின் என்பவர் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,30,300/- ஏற்று, திரு. E.பிரெவின் என்பவருக்கு அரசாணை எண்.78 ந.நி (ம) கு.வ.துறை நாள்: 25.05.2009ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் 03/2026 முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் ஆணை வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண் மே.பா. அ1/655/2022)

**தீர்மானம் எண்: 247 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

3. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 34-ல் உள்ள வ.உ.சி மைதானம் அருகில் மற்றும் எல்.ஐ.சி அலுவலகம் எதிர்புறம் புனிதவதியார் தெருவில் 10X10 என்ற அளவில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய, திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) திருநெல்வேலி-7 கடிதம் ந.க.எண். 1533 /MS/2022 நாள் 21.10.2022-ஆம் தேதிய கடிதத்தில் இடம் ஒதுக்கீடு செய்து தர கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் பொது மக்கள் நலன் கருதி ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்கவும், அதற்கு மாத வாடகையாக ரூ.3,000/- என நிர்ணயம் செய்திடவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:-</u>

1. பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட, வார்டு எண் 34-ல் உள்ள வ.உ.சி மைதானம் அருகில் மற்றும் எல்.ஐ.சி அலுவலகம் எதிர்புறம் புனிதவதியார் தெருவில் பால் பூத் 10"X10" அளவில் அமைத்துக் கொள்ளவும்,ஆவின் பாலகத்திற்கு மாத வாடகையாக குறைந்தபட்ச நிர்ணயத் தொகையாக ரூ.3000/- நிர்ணயம் செய்யலாம்.
2. மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் காலியிடம் 10"X10" என்ற அளவில் அமைக்கப்படும்ஆவின் பாலகம் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது.
3. மனுதாரர் மேற்படி ஆவின் பாலகத்தில் ஆவின் பாலக பொருட்களை மட்டுமே விற்பளை செய்ய வேண்டும். போதை பொருட்களான சிகரெட், பீடி, புகையிலை, பாக்கு ஆகிய இனங்கள் மற்றும் வடை, சாப்பாடு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் விற்கப்பட கூடாது.மேலும் அரசால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது.
4. மாநகராட்சி குத்தகை நிபந்தனைகளின்படி (வ.எண்13) குத்தகை காலத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுவதையும் அல்லது எந்த பாகமாவது மாநகராட்சிக்கு தேவையானால் குத்தகைதாரர் எந்தவித தடையும் இன்றி எவ்வித இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் இதில் மாநகராட்சியின் தீர்ப்பே முடிவானது.
5. மேற்படி விபரங்களை ரூ.20 /-பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி ஒப்புதல் செய்து மாநகராட்சி நிர்வாத்திடம் ஒப்படைக்க வேண்டும்.
6. கடை வாடகையினை பிரதி மாதம் 5-ம்தேதிக்குள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில் 18 விழுக்காடு வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு:**

**பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 34-ல் உள்ள வ.உ.சி மைதானம் அருகில் மற்றும் எல்.ஐ.சி அலுவலகம் எதிர்புறம் புனிதவதியார் தெருவில் பால் பூத் 10"X10" என்ற அளவில் மாநகராட்சி குத்தகை நிபந்தனைக்குட்பட்டு ஆவின் பாலகத்திற்கு காலி இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கு மாத வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.3000/- மற்றும் அதற்கான சேவைவரி என நிர்ணயம் செய்திடவும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்..**

அ1/03548/2022 பாளை

**தீர்மானம் எண்: 248 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---